# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590


**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7739/விசாரணை/E/2019**

திரு.R.சந்திரகாந்த் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம்,
திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு.சந்திரகாந்த். மற்றும் திருமதி.மீரா, பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 22.04.2019 தேதியிட்டு திருவண்ணாமலை துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், 07.11.2018 நாளிட்ட திரு.ஞானசூரியன், அலுவலக உதவியாளர் பணியில் சேர்ந்த போலி உடல் ஊனமுற்றோர் சான்று குறித்து அளித்த புகார் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, தங்கள் அலுவலகத்தில் முறைப்பணிகள் எந்த அடிப்படையில் போடப்படுகிறது, முறைப்பணி எந்த அரசாணையின் கீழ் போடப்படுகிறது, தனது மனைவி திருமதி.ஜெ.சகுந்தலா அலுவலக உதவியாளர் அவர்களுக்கு தகவலின்றி பணிக்கு வராததற்கு 17(b)-ன் கீழ் குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டு, நிர்வாக அலுவலர் இருக்கும்போது நிர்வாகத்திற்கு சம்பந்தம் இல்லாத ஒரு மருத்துவரை எந்த விதியின் கீழ் விசாரணை அலுவராக நியமித்துள்ளீர்கள் என்பதற்கான விதியின் நகல் ஆகியவற்றை 3 இனங்களில் தகவல் வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 28.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 22.04.2019 தேதியிட்ட கடிதத்தில் தகவல் வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 31.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசியில் வாயிலாக ஆஜராகி, தான் 22.04.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் 3 இனங்களில் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் 22.04.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உரிய தகவல்களை வழங்க மறுத்துள்ளதாக தெரிவித்து, தான் கோரிய தகவலை வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணையத்தை கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு 22.04.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்ட தகவல்கள் உரிய தகவல்கள் அல்ல எனக் கருதும்பட்சத்தில், உரிய தகவல்களை வழங்கிட காலஅவகாசம் அளிக்கக் கோரினார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை இவ்வாணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும், விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது:-

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் அல்லது அவரது அத்தாட்சி பெற்ற நபர் ஆஜராகும்பட்சத்தில் மேல்முறையீட்டாளர் 22.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7739/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம்,
திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்.

திரு.R.சந்திரகாந்த்
78/60, டாக்டர் அம்பேத்கர் தெரு,
திருவண்ணாமலை-606 601.

Copy to: File
RJ/PS 12.11.2020